*கவனிக்க.- 2019.03.08 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2115 - 2019 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2019.03.15
*2115 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 619 |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 618 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | - | | |

***கவனிக்க.-*** (i) *தெங்கு அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *நீதித்துறை (திருத்தம்) சட்டமூலம் 2019, பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2019, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

617- B81505 - 5,403 (2019/03)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## வினோத வரி விதித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிகழ்வான முன்னேற்பாடு) சட்டத்தின் 02 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (2) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சராகிய நான், 267 ஆம் அத்தியாயமான வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி பொல்கஹவெல பிரதேச சபையில் அதிகாரத்தினை செயற்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர் என்ற வகையில் அதன் செயலாளர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 2016.04.28 ஆந் திகதி 05.01.38 ஆம் இலக்க தீர்மானத்தினால் அனுமதிக்கப்பட்டது பற்றி உரிய உப பிரிவினால் இத்தால் பிரசுரிக்கின்றேன்.*

*தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க,
வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதி,
திட்டமிடல் மற்றும் நீதியும் சமாதானமும், உள்ளூராட்சி மற்றும்
மாகாண நிருவாகம், பொருளாதார மேம்பாடு, மின்சாரம் மற்றும்
மின்சக்தி , சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல்,
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை பற்றிய அமைச்சர்.
வடமேல் மாகாண சபை.*

*முதலமைச்சு அலுவலகம்,
குருநாகல்,
2017, ஓகத்து 30.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உப பிரிவினால் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரத்தின்படி பொல்கஹவெல பிரதேச சபையின் அதிகாரத்தினை செயற்படுத்துகின்ற, செயல்கள், கடமைகளை நிறைவேற்றுகின்ற பொல்கஹவெல பிரதேச சபையின் செயலாளர் ஜே. எம். நிமல் ஜயசிங்ஹ ஆகிய நான், (267 ஆம் அத்தியாயமான) வினோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி பொல்கஹவெல பிரதேச சபையின் நிருவாக எல்லையினுள்ளான பிரதேசத்தில் கொண்டு நடாத்தப்படுகின்ற, உரிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வினோத நடவடிக்கைக்கு உட்படுவதற்காக செலுத்தப்படும் பத்து சதவீதத்திற்கு சமமான வரியினை விதித்து அறவிடப்பட வேண்டும் என்றும், இத் தீர்மானம் வர்த்தமானியில் பிரசுரித்து ஒரு மாத காலம் சென்றதன் பின்பு பிறக்கின்ற முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் 2016.04.28 ஆந் திகதிய 05.01.38 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் நான் தீர்மானிக்கின்றேன்.*

*03-1155*

# பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும்

## மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## மேல் மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2019

*2,114 ஆம் இலக்க, 08 மாச்சு 2019 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகிறது.*

**01. இயலுமை**

*இப்பகுதியில் 08.04.2019 ஆந் திகதி கீழ்க்குறிப்பிட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்த குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகள் 08.04.2019 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்பது பின்வருமாறு திருத்தப்படுகிறது. "கீழ்குறிப்பிட்ட தகுதிகளைப் பூர்த்தி செய்த குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரிகள் 18.04.2019 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்."*

**1. 1. தகைமைகள்**

*இப்பகுதியில் கற்பித்தல் நியமனங்களுக்கு பொருத்தமான வகையில் குறிப்பாக கீழ்க்குறிப்பிட்ட பிரிவுகளில் கீழே VII இன் படி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பது பின்வருமாறு திருத்தப்படுகிறது. " கற்பித்தல் நியமனங்களில் பொருத்தமாகக் கருதப்பட்ட பின்வரும் துறைகளின் உட்பிரிவுகள் கீழே VII இன் படி ஆசிரியர் நியமனங்களுக்கு பொருந்தும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்றிருக்க வேண்டும்."*

*2.1 இப்பகுதியில் 08.04.2019 ஆந் திகதிய தேவையான தகுதிகள் பூர்த்தி செய்த பட்டதாரிகள் மாகாண பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்பது பின்வருமாறு திருத்தப்படுகிறது "18.04.2019 அன்று தேவையான தகுதிகள் பூர்த்தி செய்த பட்டதாரிகள் மாகாண பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்."*

*2.2 இப்பகுதியில் 01.01.2011 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்படும் மேல் மாகாண ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரிவு 7.2.4 ஆம் பிரிவின் படி ஆட்சேர்ப்பு நடைபெறும் என்பது பின்வருமாறு திருத்தப்படுகிறது "01.07.2008 முதல் அமுல்படுத்தப்படும் மேல் மாகாண ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் பிரிவு 7.2.4 ஆம் பிரிவின் படி ஆட்சேர்ப்பு நடைபெறும்".*

*2.3 இப்பகுதியில் போட்டிப் பரீட்சை மற்றும் ஒரு செயன்முறைப் பரீட்சை நடத்தப்படும். பெறும் புள்ளிகளின் வரிசை ஒழுங்கின்படி வெற்றிடம் நிரப்பப்படும். (31.12.2020 ஆந் திகதி வரையான வெற்றிடங்களுக்கே ஆட்சேர்ப்பு இடம்பெறும்) என்பது பின்வருமாறு திருத்தப்படுகிறது " ஒரு போட்டிப் பரீட்சை மற்றும் ஒரு செயன்முறை பரீட்சை என்பன நடத்தப்பட்டு பெற்றுக்கொண்ட மொத்த புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையிலே ஆட்சேர்ப்பு இடம்பெறும் (31.12.2020 வரையான வெற்றிடங்களுக்கே ஆட்சேர்ப்பு இடம்பெறும்)".*

எழுத்துப் பரீட்சை பாடவிதானம்

| *பாடம்* | *உச்ச புள்ளிகள்* | *அதி குறைந்த சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை - (நேரம் 01 மணித்தியாலம்) | *100* | *40* |
| பொது அறிவுப் பரீட்சை (நேரம் 1 மணித்தியாலம்) | *100* | *40* |

**பாட இலக்கம் 01 - நுண்ணறிவு பரீட்சை**

*இந்த வினாத்தாளில் விண்ணப்பதாரிகள் ஆசிரியர் தொழில்முறை மற்றும் தர்க்க ரீதியான திறன்களை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது 50 பல் தேர்வு மற்றும் குறுகிய பதில் கேள்விகளைக் கொண்டுள்ளது. அந்தக் கேள்விகளுக்கு குறுகிய பதில்கள் வழங்கப்பட வேண்டும்.*

**பாட இலக்கம் 02 - பொது அறிவுப் பரீட்சை**

இந்த வினாத்தாளில் விண்ணப்பதாரிகளின் பொது அறிவு மற்றும் உள்ளூர் கல்வி போக்குகள் பற்றிய பொது அறிவு மற்றும் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய பொது அறிவு ஆகியவற்றை பரிசோதிக்க பல்தேர்வு மற்றும் குறுகிய பதில் கேள்விகளைக் கொண்டுள்ளது.

ஒரு போட்டிப் பரீட்சை மற்றும் ஒரு செயன்முறை பரீட்சை என்பன நடாத்தப்பட்டு பெற்றுக் கொண்ட புள்ளிகளின் ஒழுங்கு அடிப்படையிலே ஆட்சேர்ப்பு இடம்பெறும் (31.12.2020 வரையான வெற்றிடங்களுக்கே ஆட்சேர்ப்பு இடம் பெறும்)

1. பிரயோகப் பரீட்சையில் விண்ணப்பதாரியால் தெரிவு செய்யப்பட்ட ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் விளக்கக்காட்சியொன்று செய்யப்படல் வேண்டும்.

**பிரயோகப் பரீட்சை செயல்முறை :**
பிரயோகப் பரீட்சை - 05 நிமிடங்களுக்கு குறையக்கூடாது

| தொடர் இல. | பிரயோகப் பரீட்சை புள்ளி திட்டம் | உச்ச புள்ளி | குறைந்தபட்ச தேர்ச்சிப் புள்ளி |
|---|---|---|---|
| 01. | நோக்கமும் வருகையும் | 05 | 02 |
| 02. | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03. | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04. | நேர நிர்வாகம் | 05 | 02 |
| 05. | விளக்கக்காட்சி நுட்பங்களைப் பயன்படுத்துதல் | 05 | 02 |
| | மொத்தப்புள்ளி | 25 | |

**2. பிரயோகப் பரீட்சை செய்முறை :**
(i) பிரயோகப் பரீட்சை செய்முறைக்கான நேரம் 05 நிமிடங்களுக்கு குறையக்கூடாது
(ii) பிரயோகப் பரீட்சைக்காக பெறக்கூடிய அதிகூடிய புள்ளிகள் 25 ஆகும்.
(iii) ஒவ்வொரு செயன்முறைக்கும் ஆகக்குறைந்தது (02 புள்ளிகளைப் பெற வேண்டும்)

**3. பிரயோகப் பரீட்சை பாடப்பரப்பு :**
(i) நோக்கம் மற்றும் நுழைவு
உள்நுழைதல் மற்றும் வெற்றிகரமாக நோக்கத்தை விளக்கும் திறனை மதிப்பிடுவது.

(ii) ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு
ஒரு ஆசிரியராக குரல் கட்டுப்படுத்தல் திறன் மதிப்பீடு

(iii) தொடர்பாடல் தெளிவு
கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் திறம்பட தொடர்பு கொள்ளும் திறன் மதிப்பீடு

(iv) நேர முகாமைத்துவம்
கொடுக்கப்பட்ட நேரத்தில் ஒரு நோக்கத்தை அடைவதற்கான திறனை மதிப்பீடு செய்தல்

(v) விளக்கக்காட்சி நுட்பங்களைப் பயன்படுத்துதல்
நோக்கம் அடைய நுட்பங்களை பயன்படுத்தும் திறன் மதிப்பீடு

**3. விண்ணப்பிக்கும் முறை :**

3.3 இப்பகுதியில் சரியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்கள் "மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.) 109, பிரதான வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 08.04.2019 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கிய தபால் உறையின் மேல் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண பாடசாலைகளில் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019" எனத் தெளிவாகக்

குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பது பின்வருமாறு திருத்தப்படுகிறது. இப்பகுதியில் சரியாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்கள் "மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.), இல. 109, பிரதான வீதி, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு 18.04.2019 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கிய தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண பாடசாலைகளில் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2019 மற்றும் பாடம், ஆசிரிய வகுதி " எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

எம். ஜீ. ஏ. திலகரத்ன,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

03-1528